பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஆண்டு புரட்டாதி மீ 20 உ. சனிக்கிழமை (06-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 16 கதிர்: 213

# தாயகப் பூமியை மீட்பதற்கு தொடர்ந்து போராடுவோம்



## மக்களுக்கு பிரபா அழைப்பு

### தீருவில் கூட்டத்தில் விசேட செய்தி

— தீருவிலிலிருந்து எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், அக். 6

நாம் தனித்து நின்று போராடுகிறோம். எமக்குள்ள ஒரேயொரு பலம் ஆத்ம பலம்தான். எத்தகைய குண்டு வீச்சினாலும் எமது மனோபலத்தை அழித்துவிட முடியாது.

நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயகப் பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அறிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை, தீருவில் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற பன்னிரு போராளிகளின் மூன்றாம் ஆண்டு நினைவுக் கூட்டத்துக்கு அனுப்பிய செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நினைவுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசை, இச்செய்தியை அங்கு வாசித்தார்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய தினம் எமது

[4 ஆம் பக்கம் பார்க்க]

### ஹெலித்தாக்கு

சுன்னாகம். மல்லாகம். தெல்லிப்பளை. சட்டுவன் பகுதியில் நேற்று மாலை 3 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று பரவலாக வேட்டுகளைத் தீர்த்தது. (உ-3)

### ஊர்காவலர் பலி

வவுனியா நேரியகுளத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு ஊர்காவல் படையினர் உயிரிழந்தனர் (உ)

### 6,900 வீடுகள் திருமலையில் சேதம்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் ஆரம்பமான சண்டையின் காரணமாக சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை சுமார் 6 ஆயிரத்து 900 ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது (உ-எ)

### வி. பி. சிங்கை விலகக் கோரிக்கை

பிரதமர் வி பி சிங் பதவி விலக வேண்டும் என்று கோரி 20 ஜனதா தள் எம்பிக்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று நேற்று இரவு அவரிடம் சமர்ப்பிக்கப்பட விருந்தது (உ எ)

## புலிகளுடன் பேச அரசு முயற்சி!

### அன்ரன் பாலசிங்கம் தகவல்

யாழ்ப்பாணம், அக். 6

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு முயற்சி செய்யும் அறிகுறி தென்படுவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று தீருவில் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது;—

இந்தியப் படையை வெளியேற்றவும், தெற்கில் ஜே.வி.பியை அழிப்பதற்கும் வசதியாகவுமே இலங்கை அரசு எம்முடன் பேச்சு நடத்தியது

பேச்சு ஒரு பக்கம் நடக்க அரசு தனது படை மற்றும் ஆயுத பலத்தை அதிகரித்து யுத்தத்திற்கு ஆயத்தம் செய்தது.

இறுதியில் யுத்தம் வெடித்தது. புலிகளை நேருக்குநேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணர்ச்சிகர ஊர்வலம்

யாழ்ப்பாணம், அக்: 6

வீரமரணமடைந்த லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் மூன்றாவது ஆண்டு நினைவையொட்டி நேற்று வடமராட்சியில் உணர்ச்சிகரமான ஊர்வலங்கள் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கில் மக்கள் இந்த ஊர்வலங்களில் பங்குபற்றினர்.

நெல்லியடி மூத்த விநாயகர் ஆலயத்தில் இருந்து நேற்று 3. 30 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் மாலை 4. 30 மணியளவில் தீருவில் தூபியை அடைந்தது.

அதனைத் தொடர்ந்து ''மாவீரர் வீதி'' திறப்பு விழா இடம்பெற்றது

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரியை மீள இயக்குவதற்கு செஞ்சிலுவை சர்வதேசக்குழு முடிவு

### ஆனால் கோட்டை குறித்து ரஞ்சன் காலக்கெடு

யாழ்ப்பாணம், அக். 6

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மீள இயக்குவதற்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முடிவு செய்துள்ளது.

இது சம்பந்தமாக பிரஸ்தாப குழு நேற்றுக் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஆனால், யாழ். கோட்டைப் பகுதியில் இருந்து செ. ச. சர்வதேசக் குழுவினர் 24 மணித்தியால நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று நண்பகல் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு நேற்று(5ஆம் திகதி) கொழும்பில் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளும், யாழ்ப்பாணம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிமெந்து ஆலைப் பகுதியில் விமானக் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், அக். 6

காங்கேசன்துறை, சிமெந்துத் தொழிற்சாலைப் பகுதி. மயிலிட்டிக் கரை ஆகியஇடங்களில் நேற்றுக்காலை 10 மணி அளவில் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

காலை 10 மணியளவில் காங்கேசன்துறைப் பகுதியை வட்டமிட்ட இரு பொம்மர்கள் திஸ்ஸவிகாரை இராணுவ முகாமுக்கு அண்மித்த பகுதிகளில் 3 குண்டுகளை வீசின.

சிமெந்துத் தொழிற்சாலை மீது வீசப்பட்ட குண்டினால் அங்கிருந்த கொட்டகை ஒன்று பலத்த சேதமுற்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் "பாஸ்" முறை தற்காலிகமாக நிறுத்தம்!

யாழ்ப்பாணம், அக். 6

நேற்று முதல் யாழ். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

''இம்முறையினால் எமது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியது நாம் அறிந்ததே.

எம் மத்தியில் [illegible] ஸ்ரீலங்கா அரசின் [illegible]களின் நடவடிக்கைகளினால் எம் மக்கள் இத்தகைய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழீழ மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் பிரகடனப்படுத்தாத பொருளாதாரத் [illegible] தல் போன்றவற்றினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் கைது செய்த அகதிகள் நிலை என்ன?

யாழ்ப்பாணம், அக். 6

வாழைச்சேனை பேத்தாளையில் பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த அகதிகளை நேற்று முன்தினம் கல்குடா இராணுவத்தினர் பலவந்தமாக இரண்டு பஸ்களில் ஏற்றிக்கொண்டு சென்றிருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அகதிகளுக்கு பின்னர் என்ன நடந்தது என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதே சமயம் அன்றைய தினம் அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவில் பகுதியைச் சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்த சுமார் நூறு தமிழர்களை கைது செய்துஅக்கரைப்பற்று முகாமுக்கு கொண்டுசென்றதாகத்தெரிவிக்கப்பட்டது.

[உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

எங்களிடம் பித்தளை, எவசில்வர், அலுமினியப் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு; பிள்ளையார் மெற்றல் வேக்ஸ் இல 7. கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்.
(14353)

எங்களிடம் பாவித்த யன்னல்கள். நிலைகள், கதவுகள் தீராந்திகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க பார்வையிடும் நேரம்: காலை 7.00 மணி முதல் பி. பகல் 2.00 மணிவரையும் தொடர்பு இல. 07, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்.
[14354]

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் நிமியா உரம் விற்பனையாகிறது. மில்க்வைற்-யாழ்ப்பாணம். (சி 5231)

## தேவை

தமிழ் – ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளை தட்டச்சு நிறுவனத்துக்கு உடன் தேவை. Fudo Enter Pris, பிரதான வீதி, மானிப்பாய். (Bank – Shiva Studio அருகாமையில்) [சி-5230]

சோப் செய்வதற்குரிய உபகரணங்கள் தேவை. விண்ணப்பிக்கவும். இல. 148, C/o உதயன், யாழ்ப்பாணம்.
(சி-5228)

## தேவை

வெற்று சீமெந்து, கோழித்தீன் பைக்கெற்றுகள். மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(சி-5232)

## சேவை

Old Park Chinese Restaurant ஸ்தாபனத்தார் மீண்டும் தமது சேவையை ஆரம்பித்துள்ளார்கள். காலை 8 மணிமுதல் மாலை 8 மணி வரை திறந்திருக்கும்.
(14356)

## TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo, Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில்
(சி-5219)

## தவறிவிட்டது

மாயின் குஞ்சு அப்துல் பசீர் புங்கந்தாழ்வு உயிலங்குளம் என முகவரி இடப்பட்ட அடையாள அட்டையும், சாரதி அனுமதிப் பத்திரமும் கிளிநொச்சி கரடிப் போக்கிற்கும், திருவையாற்றிற்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் A.K.R றைஸ் மில், கிளிநொச்சி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(14357)

---

### சியோன் தேவாலயம்
### யாழ்ப்பாணம்

## ஆராதிப்போர் கவனத்திற்கு

முன்பு பத்திரிகையில் அறிவித்தபடி ஞாயிறு ஆராதனைகள் தொடர்ந்தும் அந்தந்த இடங்களிலேயே நடைபெறும். மாற்றங்கள் செய்யப்படும்போது மறு அறிவித்தல் கொடுக்கப்படும்.

(14367) போதகர்.

---

## அகதிகள் பற்றிய கூட்டம்

நவாலி, அக். 6

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இன்று 6 ஆம் திகதி சனிக்கிழமை 3 30 மணிக்கு அகதிகள் சம்பந்தமான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அப்பாடசாலையில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்ட உணவுகள் சம்பந்தமான வரவு செலவுத் திட்டம் பற்றி முக்கியமாக ஆராயப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. [இ - 100]

---

## அரசாங்க அறிவித்தல்

முழங்காவில் மத்திய மருந்தகத்தில் பதிவு வைத்திய அதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் ரி. வேலுசாமி அவர்களை உடனடியாக கடமையை பொறுப்பு ஏற்குமாறு வேண்டப்படுகிறார்.

ந. கனகசபை
சுகாதாரசேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[சி/5235]

---

## அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர்கள் அனைவரையும் இன்று (06 – 10 – 90) காலை 9.30 மணிக்கு ஸ்ரான்லி வீதிக்கிளையில் சமூகமளிக்குமாறு முகாமையாளரினால் கேட்கப்பட்டுள்ளார்கள்.

முகாமையாளர்
**ஹற்றன் நஷனல் வங்கி**
[C/5236]

---

## கர்த்தரைத் தொழுது கொள்வோம் வாருங்கள்

நாட்டு நிலைமை காரணமாக இதுவரை அவ்வப் பகுதி வீட்டாச்சிரமங்களில் நடைபெற்று வந்த ஆராதனை எதிர்வரும் 07-10-90 தொடக்கம் ஆலயத்தில் நடைபெறும். சகல விசுவாசிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆராதனை நேரம்:- காலை 8.30 மணி

கல்வாரித் தேவாலயம்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(14361)

---




உங்கள்
அபிமானத்திற்குரிய
மில்க்வைற்
தயாரிப்புகள்
மீண்டும்
கிடைக்கின்றது.

| | | |
|---|---|---|
| மில்க்வைற் நீலசோப் | — | ரூபா 4.00 |
| அரைக்கட்டி | — | 2.00 |
| மில்க்வைற் பார்சோப் | — | 24.00 |
| மில்க்வைற் அரைபார் | — | 12 00 |
| சுப்ப மில்க்வைற் | — | 9.50 |
| சலவைப் பவுடர் 50 கிறாம் | — | 3 00 |
| நீமியா உரம் 1 கிலோ | — | 5.00 |


தங்கள் அபிமானத்திற்கும் ஆதரவிற்கும் நன்றி.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

[சி-5223]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
24 - 04 - 1901

இறைவன் அடியில்:
07 - 09 - 1990

## திரு. முருகுப்பிள்ளை இராமசாமி

(முன்னாள் ஒய்வுபெற்ற இலங்கை வங்கிக் காசாளர்)

எங்கள் அன்புத் தெய்வமே, தந்தையாய்த் தாயாய் தெய்வமாய் இருந்து பாசமாய் வழிநடத்தி வந்த ஒளிவிளக்கே, எங்கள் கண்முன் எப்பொழுதும் நிற்பதாகவே உணருகிறோம். உங்கள் திருவுருவம் மறைந்தாலும் உங்கள் அருள் உருவம் என்றும் எங்களை வழி நடத்தும் என்று ஆறுதல் உறுகின்றோம். நீங்கள் இறைவன் திருவடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் 06-10-90 இரவு நடைபெறும். அதிலும் 07-10-90இல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் பங்குபற்றி மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது சமூகந்தந்து சிறப்பித்தவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மல்லியோடை,
வல்வெட்டி.

[14260]

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நீங்காத நினைவில்

அக்டோபர் - 6



திருமதி
## பிலோமினம்மா டானியல்

(மறைந்த புரட்சி எழுத்தாளர் கே. டானியலின் மனைவி)

பிறப்பு:
25 — 05 — 1931

இறப்பு:
06 — 10 — 1986

எமது நல்வாழ்வின் உயர்ச்சிக்காகவும் மறைந்த எழுத்தாளர் கே. டானியலின் அரசியல், இலக்கிய, சமுதாய சேவைப் பணிகளின் உயர்ச்சிக்காகவும் உங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்கள் பசுமையான நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கின்றன.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''வசந்தம்''
76/2, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[13872]

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
## சடாச்சரம் தனேஸ்வரன்

(2ஆவது லெப். சின்ன அல்பேட்)

தமிழ் தாய் மகிழ: 23 - 03 - 1973
தமிழீழ நெஞ்சங்கள் குமுற: 23 - 08 - 1990

எங்களின் மண்ணதன் இறமையை வென்றிட
பொங்கி எழுந்தனை, புயலாய்ச் சினந்தனை
தங்கமாம் தாயகப் பூமியை அந்நியர்......
தாக்கிடும் வேளையில் தாவியே பாய்ந்தனை...
வேங்கையாய் எழுந்தனை வீரனாய் சாய்ந்தனை...
இங்கொரு தாயக விடியலின் போதிலே...
உங்களின் சுவடுகள் உயிர்த்தெழும் சென்றுவா

— குடும்பத்தினர்.

நீர்வேலி. [14374]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அதற்கு முன் இது

நீதி, உயர்கல்வித் துறைகளுக்குப் பொறுப்பானவர் அமைச்சர் சாகுல் ஹமீத் வடக்கு-கிழக்கு சமாதானக் குழுவின் தலைவரும் அவரே. அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது பிரதான இடம் (Chief Negotiator) வகித்தவரும் அவரே.

வடக்கு-கிழக்கு நிலைமை தொடர்ந்து கவலைக்குரியதாகவே இருக்கிறது. பிரச்சினையை சினேகபூர்வமான முறையில் தீர்க்க வேண்டும். அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மூன்று இனங்களினதும் நலன்களைக் காக்கும் விதத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் — என்று மத்திய மாகாணத்தில் நடந்த மீலாதுன்-நபி தின விழாவில் பேசுகையில் அமைச்சர் ஹமீத் தெரிவித்திருக்கிறார்

மூன்று மாதங்களும் இருபது நாட்களும் கடும் போர் நடந்தபின்னர் அமைச்சர் வெளியிட்ட மேற்படி கருத்துக்கு, அரசாங்கப் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பெரும் முக்கியத்துவம்கொடுத்துள்ளன

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்தது அல்ல என்று இராணுவ உயர் அதிகாரிகள் தொடக்கம் அரசியல் விமர்சகர்கள், விற்பன்னர்கள்வரை, எதிர்க்கூட்டு எம். பிக்கள் முதல் அரசாங்க அமைச்சர்கள்வரை, தென்னிலங்கையில் அடிக்கடி ஆள்மாறி ஆள், காலத்துக்குக் காலம் விட்டுவிட்டுச் சொன்னார்கள்; சொல்கிறார்கள்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அதற்கு ஜே. ஆர். தலைமை வகித்தால் என்ன, பிரேமதாச தலைமை வகித்தால் என்ன, இராணுவத் தீர்வையே நாடி நிற்கிறது. வெளியில் பேச்சுக்கு அரசியல் தீர்வு என்று உச்சரித்துக் கொண்டே இராணுவத்தீர்வு நாடி நடைமுறைப்படுத்துகிறது.

இராணுவ நடவடிக்கையின்போது, அரசு எப்போதும் கிழக்கில் கொடிய கண் வைக்கிறது. தமிழர்கள் விரட்டி அடிக்கப்படுகிறார்கள். அவர்களின் உடைமைகள் நாசமாக்கப்படுகின்றன. முறைக்கு முறை தமிழர் கிராமங்கள் தீண்டப்பட்டு அவை இல்லாமற் செய்யப்படுகின்றன. பின்னர் அவை சிங்களக்கிராமங்களாக மாற்றப்படுகின்றன.

திருகோணமலையிலும், அம்பாறையிலும் இப்போதும் அது தான் நடந்து வருகிறது. கிழக்கும் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி என்று சொல்வதற்கு இடந்தராமல் தமிழர்களை அங்கு எண்ணிக்கையில் மூன்றாவது இடத்துக்குத் தள்ளிவிடுவது தான் அரசு அங்கு கண் வைப்பதன் நோக்கம்.

கிழக்கில், இன்று தமிழர்களுக்கு நடப்பது நாளை ஏன் முஸ்லிம்களுக்கு நடக்க முடியாது?...எனவே பேச்சு வார்த்தை பற்றிக் குரல் கொடுக்கும் அமைச்சர் ஹமீத் கிழக்குத் தமிழரின் தாயகம் என்பதை அரசு ஏற்கச் செய்து, அங்கு தமிழர்கள் கொல்லப்படுவதையும், அங்கிருந்து அவர்கள் விரட்டப்படுவதையும், தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களமயமாவதையும் நிறுத்த முதலில் நடவடிக்கை எடுப்பாரா?

## ஹற்றன் நஷனல் வங்கி ஊழியருக்கு

யாழ்ப்பாணம், அக் 6

ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர்கள் இன்று 6 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள கிளையில் சமுகம் அளிக்கும் படி கோரப்பட்டுள்ளனர். (இ)

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், அக் 6

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்கான செப்டம்பர் மாதச்சம்பளக் காசோலைகள் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

பெரிதும் பாதிக்கப்பட்ட வேலணைக் கோட்டத்துக்கு காசோலைகள் அனுப்பப் பட்டுவிட்டன. (இ-3)

## பலாலி ஆசிரிய கலாசாலை

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், ஆசிரிய பயிலுநர், ஊழியர்கள், அனைவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கலாசாலையில் சமுகம் அளிக்கும்படி அதிபரால் கோரப்பட்டுள்ளது. (இ)

## சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல சாலைகளையும் அலுவலகங்களையும் சேர்ந்த கூலி நிர்ணயச் சம்பளச்சபை சாராத ஊழியர்களையும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தத்தமது வேலைத்தலங்களுக்கு வருமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி வ. பி.போ.ச தலைமை அலுவலகத்தில் நடந்த உயரதிகாரிகள் மாநாட்டில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிகவிவரங்களுக்குஉரியசாலை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் இந்தத்தரத்தில் உள்ளவர்கள் கடமைக்கு சமுகமளிக்காது விட்டால் அத்தினத்திலிருந்து சம்பளமற்ற விடுமுறையில் வைக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### இராணுவ நடவடிக்கைகளால்

# யாழ். மாவட்ட விவசாய ஆய்வுகள் முழு அளவில் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், அக் 6

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இது ''பயிர் முறை மாதிரிச் செய்கை'' (Farming System Model) என்று அழைக்கப்பட்டு வந்தது.

யாழ். மண்வளத்துக்கு ஏற்றமுறையில் உப உணவுப் பயிர்களான குரக்கன், சாமை பயறு, கௌப்பி முதல் காசுப் பயிரான மிளகாய் வரை இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

திட்டம் தடைப்பட்டதால் விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (இ 6)

## ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். பிரதம தபாலகத்தைச் சேர்ந்த ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் தொடர்ந்து கடமைக்கு சமுகமளிக்காது விட்டால் அந்தத் தினங்கள் அவர்களது சொந்த லீவில் கழிக்கப்படும்.

மேற்கண்டவாறு தபால் அதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் அறிவித்துள்ளார்.

சகலரும் வேலைக்கு சமுகமளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (உ-3)

## பழைய இடத்தில் மீண்டும் தபாலகம் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். பிரதம தபாலகம் மடத்தடியில் பழைய இடத்தில் மீண்டும் இயக்க ஆரம்பித்தது.

கப்பல்மூலம் கொண்டு வரப்பட்ட தபால்கள் நகரப் பகுதியில் விநியோகிக்கப்பட்டன.

நகரப்பகுதியில் வீடுகள் சேதமடைந்து இடம்பெயர்ந்து மீள வீடுகளுக்கு திரும்பாதவர்கள் தமது தபால்களை தபாலகத்தில் பெறலாம் என்றும் மற்றைய பகுதிகளுக்கு வீடுவீடாக தபால்கள் விநியோகிக்கப்படும் என்றும் தபால் அதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் தெரிவித்தார். (இ-3)

## உடுவில் உ. அ. அதிபர்

நவாலி, அக். 6

உடுவில் உதவி அரசாங்க அதிபராக திரு வி வீரகத்திப்பிள்ளை இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (இ 100)

## தொலைத் தொடர்பு ஊழியருக்கு

யாழ்ப்பாணம். அக். 6

தொலைத் தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை யாழ். சிறாப்பிட்டி ஒழுங்கையில் உள்ள மணியம்ஸ் கட்டடத்தில் உள்ள தலைமையகத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## பரிசாரகர்களை கடமைக்கு சமுகம் அளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 6

யாழ் போதனா வைத்திய சாலையில் பரிசாரகர் [அட்ரன்டன்] பயிற்சிபெற்று பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு கடந்த முதலாம் திகதி முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசாரகர்களாக பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி வெளி மாவட்டங்களிலிருந்து வெளிவாரியாக பயிற்சிபெற்று சித்தி அடைந்தவர்களும் இதுவரை கடமைக்கு சமுகமளிக்காதவர்களும் மானிப்பாய் யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் கடமைக்கு சமுகமளிக்கும்படி நிர்வாகப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-15)

## யாழ்.பல்கலை வெளிமாவட்ட மாணவர்களுக்கு

தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதி பெற்ற யாழ் பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள் இன்று 6 ஆம் திகதி பகல் 2.00 மணிக்கு தமது பயண ஆயத்தங்களுடன் யாழ் முத்திரைச் சந்தியில் சமுகம் அளிக்கும் படி வெளி மாவட்ட மாணவர் அமைப்பினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ)

## கடிதங்கள் உடனுக்குடன் விநியோகம்

யாழ்ப்பாணம், அக் 6

தபால்பெட்டியில் போடப்படும் கடிதங்கள் அடுத்த நாளே உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

மேற்கண்ட தகவலை யாழ். பிரதம தபால் அதிபர் திரு. எஸ் பரராஜசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

உள்ளூர்கடிதங்களும், வெளியூர் கடிதங்களும் தினமும் தபால் பெட்டிகளில் இருந்து சேகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## நெடுந்தீவுக் கடல் பகுதியில் படையினர் தீவிரகண்காணிப்பு

நெடுந்தீவு. அக். 6

நெடுந்தீவுக் கடலில் கடற்படைப் படகுகளின் கண்காணிப்பு தீவிரமாகி வருகிறது.

அதிவேக பீரங்கிப் படகுகளுடன் கடற்படைக் கப்பல் பி 3146 நெடுந்தீவுக் கடலில் நங்கூரமிட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து வரும் படகுகள் முதலில் கப்பலின் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன

படகில் வரும் பயணிகளின் அடையாள அட்டை இலக்கமும், பெயர்களும் கடற்படையினரால் பதிவு செய்யப்படுகின்றன.

இதனால் நடுக்கடலிலும் நயினாதீவு முகாமிலும் பயணிகள் நீண்ட நேர தாமதத்துக்கு உள்ளாகியே தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. [இ-111]

# பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழர் கழுத்து வெட்டப்பட்டு கடலில்

### அம்பாறை நிலை குறித்து அங்கிருந்து வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், அக். 6

அம்பாறை மாவட்டத்தில் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த தமிழ்க்கிராமங்களில் இருந்து தமிழ் மக்களை முஸ்லிம் ஊர் காவல் படையினரும், ஸ்ரீலங்கா படையினரும் இணைந்து விரட்டி வருகிறார்கள். இதற்காகத் தினமும் தமிழ்க்கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு இளம் வயதினர் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டுக் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கடலில் வீசப்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பிய ஒருவர் மேற்கண்ட தகவல்களை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் உள்ள தமிழ்க் கிராமங்களான வீரமுனை, வீரச்சோலை, கணபதிபுரம், சொறிக்கல்முனை, தம்பலவத்தை, சவளக்கடை, அண்ணாமலை, நாவிதன்வெளி, மல்வத்தை, களுதாப்பிட்டி ஆகிய பகுதிகளில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தொடர்ந்து அங்கிருந்து விரட்டப்படுகிறார்கள். அவர்களது கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தினமும் நடைபெறும் தேடுதல் வேட்டைகளின் போது தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மறுநாள் அவர்களின்சடலம் தலை வெட்டப்பட்ட நிலையில் கடலிலும், ஆறுகளிலும் மிதந்துவரும்

[illegible] ளது. இதனால் மக்கள் பயத்தின் மத்தியில் வாழவேண்டியுள்ளது பலர் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

### முதலில் தோற்றுப்போன

## ஆளுநர் ஆட்சி நீடிப்பு சட்டமூலம் நிறைவேறியது

புதுடில்லி. அக். 6

பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க வகை செய்யும் திருத்தச் சட்டமூலம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைவாக்குகளால் இந்திய லோகசபையில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 432 வாக்குகளும் எதிராக 4 வாக்குகளும் கிடைத்தன. ஐந்து எம்பிக்கள் நடுநிலைமை வகித்தனர்.

இரண்டாவது தடவையாக சட்ட மூலம் கடந்த 4 ஆம் திகதி லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது விவாதமின்றி வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

முதல் தடவை இது சமர்ப்பிக்கப்பட்ட போது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெறத் தவறி இருந்தது தெரிந்ததே. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகப் பூமியை மீட்பதற்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய தினத்தில் தமிழீழத் தேசம் என்றுமில்லாத ஒரு பேரிழப்பைச் சந்தித்தது. அன்று எமது விடுதலை இயக்கத்தின் வீரத்தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரர்களை இழந்து, நாம் இரத்தக் கண்ணீர் வடித்தோம்.

அவர்களது இழப்பால் தமிழீழத் தேசமே சோகத்தில் மூழ்கியது ஆயினும், இவர்களது மரணம் எமது மனதைப் பிடித்திருந்த மாயைகளைச் சாகடித்தது போலி நம்பிக்கைகளைக் கொன்றது. எமது மக்களின் நியாய பூர்வமான போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த விரோத சக்திகள் யார் என்ற உண்மையையும் எமக்கு உணர்த்திக் காட்டியது.

எனவே இந்த பேரிழப்பு என்றுமில்லாதபடி ஒரு புதிய விழிப்புணர்வையும், சுதந்திர வேட்கையையும் எமக்குத் தந்தது. நாம் எந்த அந்நிய சக்தியிலும் தங்கியிருக்கக் கூடாது, எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்ற அபாரமான சுயநம்பிக்கையை இவர்களது சாவு எமக்குக் கொடுத்தது.

### போராட்டத்தில் திருப்புமுனை

இந்த வகையில், இம் மாவீரர்களின் உயிர்த் தியாகம் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரியதொரு திருப்புமுனையாக அமைந்தது என்றுதான் சொல்லவேண்டும். இந்த மாவீரர்களின் மரணத்தை அடுத்து இந்திய இராணுவம், எமது இயக்கம் மீது போர் தொடுத்தது.

உலகத்தின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றை நாம் எதிர்த்து நின்று போராடினோம். பெரியதொரு வல்லரசை எதிர்த்து நின்று போராடும் அளவிற்கு ஆன்மீக திடத்தையும், அசையாத நம்பிக்கையையும் எமக்குப் பெற்றுக்கொடுத்தது இந்தப் பன்னிரண்டு மாவீரர்களின் அற்புதமான தியாகமாகும்.

இந்திய இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்கு அந்த இளம்புலி வீரர்கள் மரணமானார்கள். ஆனால் அவர்களது மரணம் சாதாரண சோக நிகழ்வு அல்ல. தமிழீழ தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியைத் தூண்டிவிட்ட ஒரு வரலாற்று நிகழ்வாகவே இது அமைந்தது.

இழப்புக்களும் அழிவுகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சர்வ சாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளோம். சந்தித்தும் வருகிறோம். ஆனால் இந்த இழப்புகளும் அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்துவிட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கிவிட முடியாது.

### இனக்கொலை யுத்தம்

இன்று நாம் எமது வரலாற்று எதிரியை யுத்த களத்தில் சந்தித்து நிற்கிறோம். எமது எதிரியானவன் தனது முழு ஆயுத பலத்தையும் பிரயோகித்து ஒரு இனக்கொலை யுத்தம் நடத்தி வருகிறான்.

எதிரியிடம் ஆயுதபலமுண்டு. ஆட்பலமுண்டு. ஆதரவளிக்க நாடுகளுண்டு. நாம் தனித்துநின்றுபோராடுகிறோம் எமக்கு எந்தநாட்டின் உதவியுமில்லை. ஆனால் எமக்குள்ள ஓரேயொரு பலம் எமது ஆத்ம பலம்தான்.

ஆகாயத்திலிருந்து விழும் குண்டுகள், எமது கட்டடங்களை அழிக்கலாம். வீடுகளை அழிக்கலாம். கோவில்கள், பாடசாலைகளை அழிக்கலாம். ஆனால் எந்தவகைய குண்டுவீச்சும் எமது மனோபலத்தை அழித்துவிடமுடியாது.

இன்று எதிரி ஆட்டம் காண்கிறான். பல யுத்த அரங்குகளிலிருந்து, பின்வாங்கி ஓடுகிறான். எமது போராளிகளின் உருக்குப் போன்ற உறுதியும், வீரமும், தியாகமும், இலட்சியப் பற்றும் எதிரியின் மனோபலத்தை உடைத்து வருகிறது.

நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயகப் பூமியை, எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

எமது மடிந்த மாவீரர்களின் கனவை நனவாக்க நாம் தொடர்ந்து போராடுவோம்.

— என்று திரு. பிரபாகரன் தமது செய்தியில் தெரிவித்திருந்தார். (அ)

---

## சிமெந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் நண்பகல் 12 15 மணியளவில் மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளை வட்டமிட்ட பொம்மர்கள்மயிலிட்டி கரைப் பகுதியில் குண்டுகளை வீசின. இதனால் மேற்படி பகுதிகளில் பல வீடுகள் நாசமாகின.

இதே சமயம் —

நேற்றுக் காலை முதல் காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் அடிக்கடி தொடர்ந்த வண்ணம் இருந்தன.

மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, ஈவினைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

தொண்டமனாறு, வயாவிளான்பகுதிகளிலும்இரண்டு பொம்மர்கள் சுற்றிப்பறந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளன. [உ-119-68-ரி]

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. மு. சிற்றம்பலம் [காந்தி]

[ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்]

மு. சிற்றம்பலம் அவர்கள் காலமானார்.

இவர் சுழிபுரம் குருபூசை மடம் ஆ. முருகேசபிள்ளை - பர்வதம் தம்பதிகளின் புதல்வரும்; சாந்தநாயகியின் அன்புக் கணவரும்; காலம்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, சிவசிதம்பரம், பொன்னம்பலம், சோமசுந்தரம், ஆறுமுகம், சிவப்பிரகாசம், சொர்ணம், மங்களம், சிவகாமி, மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும்; கணபதிப்பிள்ளையின் மைத்துனரும்; வெங்கடாசலபதி, பகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும்; செல்வரத்தினம், நீலாயதாட்சி ஆகியோரின் மாமனாரும்; பாலச்சந்திரன், வாராகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் விக்டோரியாக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள அன்னாரது இல்லத்தில் 6-10-1990 சனி (இன்று) காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. வெங்கடாசலபதி

[13878]

---

## சின்னத்தம்பி நடராசா

(சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்)

திரு. சின்னத்தம்பி நடராசா அவர்கள் காலமானார். இவர் செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி (T. O Chief Engineer's Office Jaffna) நித்தியானந்தன் (Pharmacist, அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பளை) ஆகியோரின் தகப்பனாரும், ராஜேஸ்வரி, வசந்தராதேவி ஆகியோரின் மாமனாரும், வாகீசன், ஹேமதர்சனின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06-10-90) சனிக்கிழமை காலை 10. 30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(13879)

---

# ஆஸ்பத்திரியை மீள---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் குழு ஒன்றும் அக்டோபர் நான்காம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று அங்கு கட்டடங்களையும், இயந்திரங்கள் மற்றும் வைத்திய உபகரணங்களையும் பார்த்து மதிப்பீடு செய்தது.

அண்மையில் இடம்பெற்ற மோதல்களின் போது ஆஸ்பத்திரிக் கட்டடங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், ஆஸ்பத்திரியை மீண்டும் திறந்து, சிகிச்சை அளிப்பதை மீள ஆரம்பிக்க முடியும் என்று செ. ச. சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளும், டாக்டர்கள் குழுவினரும் முடிவுக்கு வந்தனர். ஆஸ்பத்திரி மீள இயங்க இரண்டு முதல் மூன்று வாரங்கள் செல்லும் (அதாவது அவசியமான திருத்த வேலைகளையும், துப்புரவாக்குதல்களையும் முடித்தபின்னர்) என்றும் உத்தேசிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், புதிதாகச் சண்டை மூளுமானால் ஆஸ்பத்திரியை மீளத் திறப்பது இயலாததாகிவிடும்.

எனவே, யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு மிகவும் வேண்டப்படும் பெரிய அளவி [illegible] எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும்ஆதரவளிப்பார்கள் என்று செ. ச. சர்வதேசக் குழு நம்புகிறது— என்று கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் தெரிவித்ததாவது:-

யாழ். கோட்டை மற்றும் ஆஸ்பத்திரி பிரதேசத்தை பொறுப்பு ஏற்கும் விஷயமாக எட்டுத்தினங்கள் சென்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன்உடன்பாட்டுக்கு வரமுடியாதுள்ளனர்.

ஆகவே யாழ். கோட்டைப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இருப்பின், அவர்களை அடுத்த 24 மணித்தியாலங்களில் அப்பகுதியைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ். கோட்டை மற்றும் ஆஸ்பத்திரிப் பகுதியைப் பொறுப்பேற்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்தி முடிவுக்கு வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நான்கு தினங்கள் அவகாசம் கேட்டிருந்தனர் —

எட்டுத் தினங்கள் சென்ற பின்னரும் உடன்பாடு காணப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சங்கத்தினர் வியாழன் காலை தெரிவித்தனர்— என்றார். (அ-எ)

---

# பாடசாலை முகாம்கள் தொடர்ந்து இயங்கும்

## வி.பு.ம. முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 6

''இடம் பெயர்ந்த அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகள் மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை அகதி முகாம்களாகவே செயல்படும் ''

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் புனர்வாழ்வுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இடம் பெயர்ந்து வந்துள்ள பெருமளவு மக்கள் பாடசாலைகளிலேயே தங்கியுள்ளனர். இவர்களுக்கு தங்குமிடங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை.

இந்நிலையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையால் பல இடங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளை விட்டு இடம் பெயர்ந்த மக்களை வெளியேறும்படி கேட்டுள்ளதாக அறிகிறோம்.

இடம் பெயர்ந்தோருக்கான புதிய முகாம்களை ஒழுங்குபடுத்தும் வரை தற்போது முகாம்களாக இயங்கும் பாடசாலைகள்தொடர்ந்தும் முகாம்களாகவே இயங்கும்

அதேவேளை பாடசாலைகள் இயங்குவதற்கு வாய்ப்பாக பாடசாலைகளில் உள்ள மக்களுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் உள்ளூர் மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எம்முடன் இணைந்து செயல்பட முன்வர வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

# புலிகளுடன் பேச---

சந்திக்க முடியாத அரசு ஆகாயத் தாக்குதலை மேற்கொண்டது.

புலிகள் எல்லா வகையிலும் ஈடு கொடுத்ததால் சிங்கள இராணுவம் ஓட்டம் பிடித்தது.

வளைகுடா நெருக்கடி, யுத்த செலவினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இராணுவத்திற்கு இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட மனோபலமின்மை ஆகியவற்றால் யுத்தத்தை தொடர்ந்து நடத்தமுடியாத நிலையில் அரசு தவிக்கிறது

இதனால் பேச்சுக்கு அரசு முயல்கிறது.

தற்போதைய ஒற்றையாட்சியின் கீழ் எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது. இந்த ஒற்றையாட்சி சிங்கள இனவாதத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கும் யாப்பு. இதன் மூலம் எமது தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

அதேவேளை இத்தனை கால யுத்தத்தின் பின்பும் — இவ்வளவு இழப்புக்களின் பின்பும் — நாம் இடைக்காலத் தீர்வு எதனையும் ஏற்கவும் தயாராக இல்லை.

தமிழீழ மக்களைத் தேசிய இனம் என்றும் —

அவர்களுக்குத் தாயகப் பூமி உண்டு என்பதையும் —

அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் சிங்கள ஆட்சியாளர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

அப்படி அங்கீகரித்தால் மட்டுமே நாம் பேச்சுக்கு செல்வோம்.

இவ்வளவு நடந்த பின் எப்படி பேச்சு நடத்துவது என நீங்கள் கேட்கலாம்.

போராட்டங்களின்போது யுத்தமும், சமாதான பேச்சும் உலகில் பல இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. இறுதியில் தேசிய விடுதலைப் போராட்டம் வென்றிருக்கிறது. இதற்கு உதாரணம் வியட்நாமாகும்.

யுத்த நிறுத்தத்திற் நம் நாம் இணங்கபோவதில்லை தற்போது பலவீனத்துடன், மன உறுகி தளர்ந்து நிற்கும் எதிரி யுத்த நிறுத்தம் என்று கூறிக் கொண்டு மீண்டும் தன்னை தயார்படுத்தி, நவீன ஆயுத பலத்துடன் மீண்டும் எம்மை அழிக்க முன்வர நாம் வாய்ப்பளிக்க மாட்டோம்.

கவே நாம் தொடர்ந்து போராடுவோம் பேச்சு நடத்துவதாயினும் தொடர்ந்து போராடிக்கொண்டே பேசலாம் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் யோகரத்தினம் யோகி, மற்றும் புலிகள் பிரமுகர்கள் செங்கதிர் நடேசன், வாஞ்சிநாதன் தேவர், மாலினி ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் திருமதி அடல் பாலசிங்கமும் கலந்து கொண்டார். (உ-9)

---

## பயணிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த வேளையிலும் எமது திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளித்த தமிழீழ மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

---

## உணர்ச்சி. . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் தீருவில் தூபிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத் தளபதி திரு. பானுவும், வீரமரணமடைந்த போராளிகளின் பெற்றோரும் தீருவிவில் அமைந்துள்ள போராளிகளின் ஸ்தூபிகளுக்கு மலர்மாலை சாத்தி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகியது.

வீரமரணமடைந்த 12 போராளிகளின் நினைவாக 12 புகைக் குண்டுகளும் வானுக்கு ஏவிவிடப்பட்டன. (உ-9)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org